Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.**23/2021**

Deposition of PW1 Witness for Defence

Defence Court

Name :Keerthika Case:

Father's Name :Ajithkumar calling:

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the **08st December 2021.**

**முதல் விசாரணை**

நான் கதவு எண்.12, ஏழுமலை நகர், 2வது தெரு, சுந்தரசோழபுரம், திருவேற்காடு, சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன அஜித்குமார் என்னுடைய கணவர். என்னுடைய மாமியார் பெயர் துர்கா. என் கணவரின் மூத்த சகோதரர் பெயர் ராஜா. என் கணவருக்கு பிரதீப், லால், கட்டப்பா ஆகியோர் நண்பர்கள் ஆவர். லால் என்பவர் என் கணவர் சிறையிலிருந்த போது நண்பர் ஆவார். லால் என்பவர் திருவேற்காட்டில் குடியிருக்கிறார். என் கணவருடன் லால் என்பவர் அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார். லால் கஞ்சா வியாபாரம் செய்துவந்ததாகவும் அதை என் கணவர் வெளியில் சொல்லிவிட்டதால் என் கணவரிடம் லால் பிரச்சனை செய்துவந்ததாகவும் அதனால் தனக்கு லால் மீது பயமாக இருப்பதாகவும் என் கணவர் என்னிடம் கூறினார். லால் என் கணவரை வெட்டிவிடுவேன் என்று சொன்னதால் என் கணவர் பயந்து கொண்டிருந்தார். 2020 ஆம் வருடம் 9வது மாதம் 12 ஆம் தேதி என் கணவர் காலை 7.30 மணிக்கு லால்

கூப்பிடுவதாக சொல்லிவிட்டு வீட்டிலிருந்நது புறப்பட்டு சென்றார். பின்னர் காலை 8.30 மணிக்கு பிரதீப் என்பவர் என்னுடைய வீட்டிற்கு வந்து லால், கட்டப்பா மற்றும் ஆஜர் எதிரிகள் ஆகியோர் சேர்ந்து  என் கணவரை கத்தியால் தலை, கை, கால் ஆகிய இடங்களில் வெட்டியதாக கூறினார். அபிராமி நகரில் சம்பவம் நடந்ததாக பிரதீப் கூறினார். உடனே இது சம்பந்தமாக என் மாமியாருக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன். அந்த சமயத்தில் என் மாமியாரும் மூத்தார் ராஜாவும் வேலையில் இருந்தார்கள். பின்னர் என் மாமியார் வீட்டிற்கு வந்தார். வீட்டிலிருந்து நானும், மாமியாரும் மற்றும் மூத்தார் ராஜாவும் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்த்தோம். நாங்கள் சென்று பார்த்த போது என் கணவரின் தலை, கை மற்றும் கால் ஆகிய இடங்களில் வெட்டப்பட்டிருந்தது. என் கணவர் இறந்துகிடந்தார். இது சம்பந்தமாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். புகார் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**